**STELLA MARIS COLLEGE (AUTONOMOUS), CHENNAI 600 086**
**(For candidates admitted during the academic year 2019–2020 & thereafter)**

**SUBJECT CODE: 19TM/FC/SI44**

**B.Voc. DEGREE EXAMINATION, APRIL 2022**
**FOURTH SEMESTER**

| | | |
|---|---|---|
| **COURSE** | **:** | **FOUNDATION – COURSE** |
| **PAPER** | **:** | **SANGA ILAKKIYAM** |
| **TIME** | **:** | **3 HOURS** |

**MAX. MARKS: 100**

**பகுதி-அ**

**(அ) அனைத்துக் கேள்விகளுக்கும் விடை தருக.** **10 X 1=10**

1. நின்ற சொல்லர் நீடுதோறு இனியர் யார் யாரைக் கூறியது?
2. யார்வாய்க் கேட்டனை, காதலர் வரவே…? யார் கூற்று?
3. உன் நுவ்வையாகும் என்று தலைவியிடம் அன்னை கூறியது எதனை?
4. மணியோசை கேட்ட தோழி தலைவியிடம் என்ன கூறினாள்?
5. பகல் போல இரவிலும் விளக்கு எரிவதால் இரவா பகலா என்று தெரியாதபடி அமைந்த ஊர் எது?
6. புற்றிலிருந்து கிளம்பும் ஈசல் அழிவது போல எவருடைய வாழ்வு அழியும்?
7. ‘பழமுதிர் சோலை மலைக் கிழவோன்’ - யாரைக் குறிக்கின்றது?
8. மீன்கொத்திக் குருவி தனக்கு நல்ல தங்கமீன் இரை கிட்டியது என்று எண்ணி எதனைப் பாய்ந்து எடுத்தது?
9. கரும்பையும் கதிரோடு கூடிய நெல்லின் தாளையும் தழைகளையும் உணவாகத் தர அவற்றை அந்த யானை என்ன செய்தது?
10. உவலைக் கூரை ஒழுகிய தெருவில் கவலை முற்றம் காவல் நின்றது எது?

**(ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 X 1=5**

1. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ________________ இலக்கியங்கள் எனப்படுகின்றன.
2. ________________ முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது.
3. தமிழர் வரலாற்றுக் களஞ்சியமாகக் கருதப்படுவது ______________ ஆகும்.
4. முல்லைப்பாட்டின் வேறு பெயர் ________________ ஆகும்.
5. கூத்தராற்றுப்படை என்று ____________________________ அழைக்கப்படுகிறது.

**(இ) பொருத்துக.** **5 X 1=5**

| | | |
|---|---|---|
| 1. நற்றிணை | - | நக்கீரர் |
| 2. குறுந்தொகை | - | மாந்தரஞ்சேரல் இரும்பொறை |
| 3. ஐங்குறுநூறு | - | பூரிக்கோ |
| 4. திருமுருகாற்றுப்படை | - | உருத்திரங்கண்ணனார் |
| 5. பெரும்பாணாற்றுப்படை | - | பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி |

**பகுதி-ஆ**

**(அ) எவையேனும் மூன்றனுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.** **3 X 3 = 9**

1. நீரின் றமையா வுலகம் போலத்
    தம்மின் றமையா நந்நயந் தருளி….

2. வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
   குளவி மொய்த்த அழுகற் சின்னீர்

3. நீர் மிகின் சிறையும் இல்லை, தீ மிகின்
   மன் உயிர் நிழற்றும் நிழலும் இல்லை...

4. வண்டல் ஆயமொடு உண்துறை தலைஇ
   புனல் ஆடு மகளிர் இட்ட பொலம் குழை. . . .

5. கவைமுள் கருவியின் வடமொழி பயிற்றிக்
   கல்லா இளைஞர் கவளம் கைப்பக்....

**(ஆ) பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க. 4 X 9 = 36**

1. நற்றிணையில் இடம்பெறும் 'புன்னையின்' சிறப்பிற்குரிய பாடலினை விவரிக்க்
2. குறுந்தொகைப் பாடல்களில் அமைந்துள்ள அகக் கருத்துகளைத் தொகுத்துரைக்க.
3. ஐங்குறுநூற்றில் வெளிப்படும் அகவாழ்வியல் செய்திகளை எடுத்துரைக்க.
4. பழந்தமிழர் சிறப்பை விளக்கும் வண்ணம் புறநானூற்றில் அமைந்த ஔவையார் மற்றும் ஒக்கூர் மாசாத்தியார் படல்களை மதிப்பிடுக.
5. அருவி காட்சியையும் இயற்கை வளத்தினையும் திருமுருகாற்றுப்படை வழி நிருவுக.
6. முல்லைப்பாட்டு உணர்த்தும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(இ) இலக்கிய வரலாறு - ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1 X 10 = 10**

1. புறநானூறு
2. ஐங்குறுநூறு
3. மலைபடுகிடாம்

**பகுதி-இ**

**(அ) நாடகத் திறனாய்வு - ஒன்றனுக்கு விடையளிக்க. 1 X 15 = 15**

1. குடிகுடியைக் கெடிக்கும் கருத்தை உணர்த்தும் 'புதை குழி' நாடகம் குறித்து ஆய்க.
2. திணிப்பு நாடகம் வெளிப்படுத்தும் குழந்தைகளின் எண்ணங்களை மதித்தல் குறித்து மதிப்பிடுக.
3. பெற்றோரைப் பேணுதல் பற்றிய விழிப்புணர்வு எண்ணங்களை விளக்குக.
4. பழுத்தவோலை நாடகத்தின் வழி பெற்றோரைப் பேணுதல் பற்றிய விழிப்புணர்வு கருத்துகளை விவரித்துரைக்க.

**(ஆ) கடிதம் - ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1 X 10 = 10**

1. காணாமல் போன இருசக்கர வாகனத்தைக் கண்டுபிடித்துத் தரும்படி சென்னைக் காவல்துறை ஆணையருக்குப் புகார் கடிதம் ஒன்று வரைக.
2. நம் கல்லூரியில் நிகழ்ந்த விளையாட்டு விழாவில் பங்கேற்றுப் பரிசு பெற்றது குறித்து உன் பெற்றொருக்கு ஒரு கடிதம் எழுதுக.

********